People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

31.3.2011

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 26.3.2011 முதல்31.3.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

## 26-3-2011 முதல் 31-3-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 33 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 6 |
| 5. | வகுப்பறை வன்முறை | – |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 2 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 13 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | – |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | 1 |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 1 |
| | மொத்தம் | 60 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-13
# 26.3.2011 முதல் 31.3.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 885. | 26.3.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் மெயின் ரோட்டில் உள்ள செல்வராஜ் மகள் சாதனா(17). பிளஸ் 2 தேர்வு எழுத சென்ற சாதனாவை காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 886. | 26.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி அருகேயுள்ள கோரிக்கடவைச் சேர்ந்த குழந்தைகள் முத்துமதி(7) தேவதர்ஷினி(3). இவர்களின் தாய் தந்தை இருவரும் இறந்ததால் நீண்பாவின் அரவணைப்பில் குழந்தைகள் வளர்ந்தனர். குழந்தைகளின் தந்தை மாரிமுத்துவின் இறப்பு தொடர்பான நிவாரணைத் தொகை கிடைக்கயுள்ளதை அறிந்தவர்கள் குழந்தைகளை கடத்திச் சென்றதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 887. | 26.3.2011 | **மதுரை மாவட்டம்:** நாகமலைபுதுக்கோட்டையைச் சேர்ந்த பேராசிரியர் ரவிச்சந்திரன் மனைவி சந்திரா(42). கார் டிரைவர் சுரேஷ் சந்திராவை பாலியல் பலாத்காரம் செய்ததோடு மொபைல் போன் கேமிராவில் படம் பிடித்து பணம் கேட்டு சந்திராவை மிரட்டல். சுரேஷ் மீது சந்திரா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 888. | 26.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை காமராஜர்புரத்தைச் சேர்ந்த ஜெயமேரி (30) கணவர் உட்பட குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக ஜெயமேரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 889. | 26.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** மல்லாங்கிணறு அருகே உள்ள அழகியநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அரசு பேருந்தில் வந்த 36 மாணவர்களுக்கு விபத்து ஏற்பட்டு காயம். காயமடைந்த மாணவர்களுக்கு | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பள்ளியின் ஆசிரியர்கள் முதலுதவி செய்யவில்லை. ஆத்திமடைந்த பெற்றோர் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பேராட்டம். | | |
| 890. | 27.3.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே உள்ள சாமநத்தம் தெற்கு தெருவைச் சேர்ந்த பிசசை மகள் சண்முகப்பிரியா(14). வீட்டில் தனியாக இருந்த சண்முகப்பிரியா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 891. | 27.3.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே கவுன்டன்பட்டியைச் சேர்ந்த வேலம்மாள்(65). அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். வேலம்மாளுக்கு உதவிக்கு ஆள் இல்லாததால் சிகிச்சை தர மறுத்ததோடு, மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்பட்டார். | முதியோர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 892. | 27.3.2011 | **கோவை மாவட்டம்:** எம். கல்லுப்பட்டி அருகே துள்ளுகுட்டி நாயக்கன்பட்டியைச் சேர்ந்த வேலு மகள் பேச்சியம்மாள் (17). பிளஸ் 2 தேர்வு எழுதச் சென்ற மாணவி பேச்சியம்மாளைக் காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 893. | 27.3.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்த மூர்த்தி(42) மனைவி ஜெயந்தி(36). திருக்கோவிலூர் ரிசிவந்தியம் தொகுதியில் சுயேச்சையாக மனு தாக்கல் செய்ய வந்த ஜெயந்தியை மர்ம நபர்கள் கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினமலர் |
| 894. | 28.3.2011 | **மதுரை மாவட்டம்:** ராமேஸ்வரம் ரயில்வே பீடர்ரோட்டைச் சேர்ந்த ராகுல் மனைவி பூபதி(20) குழந்தைக் ஹரிகரசுதன். பூபதி தனது தாயாருடன் அரவிந்த கண் மருத்துவமனைக்கு வந்து மீண்டும் ஊருக்குச் செல்ல பெரியார் பேருந்து நிறுத்தத்தில் இரவு படுத்திருந்தபோது குழந்தையைக் கடத்திச் சென்றதாகப் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 895. | 29.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** நரிக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட தாமரைக்குளம் கிராமத்தில் வசிக்கும் தலித் மக்கள் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திருமாளவனின் போஸ்டர் மற்றும் சுவர் விளம்பரம் ஒட்டினர். ஆதிக்கச் சாதியினர் போஸ்டர் மீது சாணி எறிந்ததாக தலித் மக்கள் ஆதிக்கச் சாதியினர் மீது காவல்நிலையத்தில் புகார். ஆத்திரமடைந்த ஆதிக்கச்சாதியினர் காவலர்கள் முன்னிலையில் தலித் மக்கள் வீடுகளை சூறையாடியதோடு அவர்களை தாக்கினர். எனவே தலித் மக்கள் தங்களது ரேசன் கார்டுகளை ஆட்சித்தலைவரிடம் ஒப்படைக்க முடிவு. | & காவல் நிலையச் சித்திரவதை | |
| 896. | 29.3.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** முக்காணியில் ஆறுமுகம் என்பவர், அரசு அனுமதி பெற்று திருவிழா பட்டாசுகளை தயாரிக்கும் குடோன் நடத்திவருகிறார். குடோனில் ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு பணிபுரிந்து தொழிலாளி முருகன்(52) முக்காணி பேச்சியம்மாள் (48), சிவகளை சித்திரை சேகர்(52) செல்லையா(50) மரணம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமலர் |
| 897. | 29.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு வந்த முத்துநகர் எக்ஸ்பிரஸ் ரெயில் திண்டுக்கல் போலீஸ் சரகத்தில் பயிற்சியில் உள்ள பெண் போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் பயணம் செய்தார். உடன் பயணம் செய்த பல்லாவரம் யூனியன் கார்ப்பரேட்டு காலனியைச் சேர்ந்த நடராஜன் மகன் கோபாலகிருஷ்ணன்(35) பெண் காவலரிடம் சில்மிஷம் செய்ததாக கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 898. | 29.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரி தொகுதிகளில் போட்டியிடும் தி.மு.க கூட்டணி கட்சி வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்து வந்த நடிகர் வாகை சந்திரசேகருக்கும் பின்தொடர்ந்து வந்து தே.மு.தி.கவினருக்கும் இடையே மோதல். தட்டிக்கேட்கச் சென்ற திமுகவினருக்கும் காவலர்களுக்கும் மோதல். காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 899. | 29.3.2011 | **திருச்சி மாவட்டம்:** தஞ்சையைச் சேர்ந்த மாணவி ஒருவர் மாலை திருச்சி ரயில்வே ஜங்ஷன் சுரங்கப்பாதையில் ரயிலில் ஏறுவதற்காக சென்ற போது ஔப்டி அண்ணாநகர் குடியிருப்பைச் | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பிரபாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த பாபு முருகானந்தம்(34) மாணவியிடம் சில்மிஷம் செய்ததாக புகார். | | |
| 900. | 29.3.2011 | **திருச்சி மாவட்டம்:** காந்திமார்க்கெட் பிள்ளைமார் தெருவைச் சேர்ந்த ராணி(15). அதே பகுதியைச் சேர்ந்த லோடுமேன் பால்ராஜ்(31) ராணியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக புகார். பால்ராஜ் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பிரபாகர் |
| 901. | 29.3.2011 | **திருச்சி மாவட்டம்:** லால்குடி அருகே உள்ள நம்புக்குறிச்சியைச் சேர்ந்த 12 வயது பள்ளி மாணவிக்கு, கல்லகம் பகுதியைச் சேர்ந்த வாலிபருக்கும் நடக்க இருந்த திருமணத்தை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். | குழந்தைகள் மீதான வன்முறை & குழந்தைத் திருமணம் தடுப்பு | பிரபாகர் |
| 902. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி களத்துமேட்டைச் சேர்ந்த அன்பரசன்(33) மனைவி அனுராதா(27). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த அனுராதா விஷம் குடித்துத் தற்கொலை. தனது தங்கை சாவில் மர்மம் இருப்பதாக அனுராதாவின் அண்ணன் காவல் நிலையத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (18.3.11) |
| 903. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** போளூர் ஜம்னாமரத்தூர் அடுத்த அரசவள்ளி கிராமத்தைச் சேர்ந்த சந்தோஷ் மனைவி துர்கா(20) திருமணமாகி 6 மாதங்களே ஆன நிலையில் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18.3.11) |
| 904. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** பெரியபாளையம் அடுத்த ஆரணி புதிய தமிழ்காலனியைச் சேர்ந்த சுரேஷ்(30). பாடியநல்லூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் திருவிழாவிற்கு சென்ற திருநங்கையான சுரேசுக்கும், கணேசன்(30) என்பவருக்கும் நடந்த வாய்த்தகராறில் ஆத்திரமடைந்த கணேசன் சுரேஷை அடித்துக் கொலை செய்ததாக புகார். | திருநங்கைகள் மீதான வன்முறை | பாஸ்கர் (19.3.11) |
| 905. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி அருகேயுள்ள எருக்குவாய் கிராமத்தைச் சேர்ந்த முத்து மகள் அம்மு(17). அதே பகுதியைச் சேர்ந்த சேட்டு (26) அம்முவை காதலித்து கர்ப்பமாக்கியதால் மனமுடைந்த அம்மு விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான பாலியல் ன்முறை & தற்கொலை | பாஸ்கர் (19.3.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 906. | 29.3.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** திருநின்றவூர் மூவேந்தர் நகர் பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த சுந்தரி(45) மகன் குமரன்(25). பக்கத்து வீட்டில் வசிப்பவர் முருகன்(35). இருவருக்கும் நடந்த தகராறில் தட்டிக் கேட்கச் சென்ற சுந்தரியை முருகன் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (23.3.11) |
| 907. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** செய்யாறு டவுன் காமராஜர் நகர் பகுதியைச் சேர்ந்த முஸ்தாக் மனைவி ரகானா(30). முஸ்தாக்கிற்கு வேறு பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பை தட்டிக் கேட்ட மனைவி ரகானாவை முஸ்தாக் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22.3.11) |
| 908. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** முடினாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த பாலசுப்ரமணியம்(35) மனைவி பவித்ரா(25). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக பவித்ரா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் (24.3.11) |
| 909. | 29.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆம்பூர் அடுத்த காட்டு கொல்லையைச் சேர்ந்த கன்னியப்பன் மனைவி தீபா(29). அடுத்ததாக கன்னியப்பன் சித்ராவை இரண்டாவது திருமணம் செய்தார். இந்நிலையில் கன்னியப்பன் இருவரிடமும் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதோடு மூன்றாவதாக மம்தா என்ற பெண்ணை திருமணம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் (23.3.11) |
| 910. | 29.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கீழபென்னாநத்தூர் அருகே உள்ள சிறுநாத்தூரைச் சேர்ந்த அமிர்தம்(25). அதே பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன்(51) அமிர்தாவை வழிமறித்து ஆபாசமாக பேசியதோடு தடியால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக அமிர்தம் கிருஷ்ணன் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (23.3.11) |
| 911. | 29.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த சிக்கனாங்குப்பம் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் மனைவி சுதா(33). பூமரம் புதுமனை பகுதியைச் சேர்ந்த ஐஸ் வியபாரி குணா, சுதாவின் கழுத்தை கத்தியால் அறுத்து நகையை பறித்துச் சென்றதாக சுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (17.3.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| 912. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** பெரியபாளையம் அருகேயுள்ள நெய்வேலி கிராமத்தைச் சேர்ந்த ஜெகன்(30) மனைவி ரம்யா(22). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ரம்யா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (18.3.11) |
| 913. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அருகே மடவிளாகம் கிராமத்தைச் சேர்ந்த பாபு(25) மனைவி தனலட்சுமி(21) தூக்குப்போட்டுத் தற்கொலை. தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக தனலட்சுமியின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (22.3.11) |
| 914. | 29.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை வெள்ளியூர் கிராமத்தைச் சேர்ந்த சேகர் மனைவி கவுரி(35). தினமும் குடித்துவிட்டு வந்து சேகர் துன்புறுத்துவதாக கவுரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (24.3.11) |
| 915. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை கூறைநாடு, ஒத்தசரகு தெருவைச் சேர்ந்த ரமேஷ் மனைவி விஜயலெட்சுமி(28). தாய் வீட்டிற்கு வந்த விஜயலெட்சுமியை தாய் திட்டியதால் மனமுடைந்த விஜயலெட்சுமி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் (14.3.11) |
| 916. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** தரங்கம்பாடி அருகே உள்ள நெடுவாசல் காலனிதெருவைச் சேர்ந்த ஞானதாஸ் மகள் பிரியா(3). அதே பகுதியைச் சேர்ந்த இம்மானுவேல்(75) பிரியாவை பாலியல் பாலத்காரம் செய்ய முயன்றதாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | திருமுகம் (14.3.11) |
| 917. | 29.3.2011 | **தஞ்சை மாவட்டம்:** தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன்கோயில் அருகே கத்தரிநத்தம் கிராமத்தில் உள்ள ஒரு வயலில் அடையாளம் தெரியாத பெண் கை, கால் கட்டப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | திருமுகம் (15.3.11) |
| 918. | 29.3.2011 | **திருவாரூர் மாவட்டம்:** காரைக்கால் நெடுங்காட்டை அடுத்த குரும்பகரம் பெருமாள் கோயில் தெருவைச் சேர்ந்த குமார்(31) அந்த பகுதியில் கல்லூரிக்குச் சென்ற மாணவிகளை ஈவ்டீசிங் செய்ததாக புகார். குமார் கைது. | ஈவ்டீசிங் & பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் (16.3.11) |
| 919. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை | மாணவி மாயம் | திருமுகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடுத்த எலந்தங்குடியைச் சேர்ந்த முகமது இஸ்மாயில் மகள் சாமியாபர்வீன்(17) பிளஸ் 2 மாணவி. பள்ளி சென்ற சாமியாபர்வீனை காணவில்லை என பெற்றோர் புகார். | & குழந்தைகள் மீதான வன்முறை | (17ி.3.11) |
| 920. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** கொள்ளிடம் அருகே உள்ள நல்லூரி கிராமம் வடக்கு வீதியைச் சேர்ந்த முத்துகருப்பன் மனைவி ரமா(36). மருத்துவமனைக்கு சென்ற ரமாவை காணவில்லை என முத்துகருப்பன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | திருமுகம் (20.3.11) |
| 921. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த மருதூர் தெற்கு சேத்தியைச் சேர்ந்த கந்தசாமி மனைவி மகேஸ்வரி. திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆனநிலையில் மகேஸ்வரி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | திருமுகம் (22.3.11) |
| 922. | 29.3.2011 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த புஷ்பவனம் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் மாணவன் கண்ணதாசன். வேதாரண்யம் இன்ஸ்பெக்டர் சுபாஷ் சந்திரபோஸ் கண்ணதாசன் உட்பட 6 மாணவர்களை அழைத்து பள்ளியில் நடந்த ஒரு பிரச்சனை தொடர்பாக விசாரித்தார். மனமுடைந்த கண்ணதாசன் விஷம் குடித்துத் தற்கொலை. | காவல் நிலையச் சித்திரவதை & தற்கொலை | திருமுகம் (22.3.11) |
| 923. | 30.3.2011 | **மதுரை மாவட்டம்:** ஆனையூர் அகதிகள் முகாமைச் சேர்ந்த சிவராஜன் மகன் மணிகண்டன்(14). பள்ளி ஆண்டுவிழாவில் கலந்துக் கொள்ள தந்தையிடம் புதுச்சட்டை கேட்டு தந்தை வாங்கித் தர மறுத்ததால் மனமுடைந்த மாணவன் தூக்குப்போட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந் தி |
| 924. | 30.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவாடானை சட்டமன்றத் தொகுதியில் ஆர்.எஸ்.மங்கலம் அருகே பிச்சாங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட களவான்குடி பகுதியில் தேர்தலுக்காக சாலை போடுவதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு. திமுக எம்.பி. ரித்தீஸ் மற்றும் ஆதரவாளர்கள் தலித் சமூகத்தைச் சேர்ந்த நாராயணனைத் தாக்கியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 925. | 30.3.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** காட்டுநாயக்கன்பட்டி மாசாணமூர்த்தி மகன் தமிழ்பாரதி(14). மாணவன் தமிழ்பாரதி தூக்கிட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 926. | 30.3.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி தி.மு.க ஒன்றியச் செயலர் ராஜேந்திரன் மனைவி ரூபாஜெயந்தி(35) வீட்டிற்கு நள்ளிரவில் சோதனை செய்ய வந்த காவலர்கள் அத்துமீறி நடந்ததாகவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி ரூபாஜெயந்தி டி.ஐ.ஜியிடம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 927. | 30.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதிச்சியம் காமராஜர் நகரைச் சேர்ந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி சுப்பிரமணி மீது மதிச்சியம் காவல்நிலைய காவலர்கள் பொய் வழக்கு பதிவு செய்து பிச்சைக்காரர் மறுவாழ்வு மையத்தில் அடைத்துள்ளதாக சுப்பிரமணி மனைவி நாச்சியம்மாள் உயர் நீதிமன்றத்தில் ஆட் கொணர்வு மனு தாக்கல். | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 928. | 31.3.2011 | **நாகை மாவட்டம்:** மயிலாடுதுறை மணல்மேடு காவல்துறைக்குட்பட்ட இலுப்பப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த ஆரோக்கியமேரி ஓய்வு பெற்ற ஆசிரியர் நடேசன் வீட்டில் ஒத்திக்கு குடியிருந்தார். நடேசன் மணல் மேடு பேரூராட்சி தலைவர் விஸ்வநாதனின் மனைவி மலர்கொடிக்கு வீட்டை கிரையத்திற்கு விற்றுள்ளார். விஸ்வநாதன் ஆரோக்கிமேரியின் வீட்டிற்குள் அடியாட்களுடன் அத்துமீறி நுழைந்து பொருட்களை அள்ளி வெளியே வீசியதோடு பணம் மற்றும் நகைகளை எடுத்துச் சென்றதாக அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஆரோக்கியமேரி புகார் கொடுத்தும் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என ஆரோக்கியமேரி புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல்நிலையச் சித்திவதை | தீக்கதிர் |
| 929. | 31.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை மாவட்ட விவசாய துறையில் உதவியாளராக இருப்பவர் மகேஷ்(40). இவர் மீது துறை ரீதியான நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் அதை | லஞ்சம் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரத்து செய்யுமாறு இணை இயக்குனர் தங்கச்சாமி பாண்டியனை மகேஷ் அணுகினார். அவர் ரூபாய் 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக மகேஷ் புகார். | | |
| 930. | 31.3.2011 | **புதுவை மாநிலம்ம்:** குறிஞ்சிப்பாடி அடுத்த ஆடூர்குப்பத்தைச் சேர்ந்த அரசன் மகள் ஜோதிகா(7). பெற்றோர் மரணமடைந்ததால் மாமா ரஞ்சித் ஜோதிகாவை மீட்டு அரசூரில் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் லட்சுமிநாராயணனிடம் ஒப்படைத்தார். லட்சுமிநாராணனன் மற்றும் அவரது மனைவி பேபி இருவரும் குழந்தையை வீட்டுவேலை செய்ய கூறி சூடுபோட்டு துன்புறுத்தியதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 931. | 31.3.2011 | **திருச்சி மாவட்டம்:** பெரியமிளகுப் பாறையைச் சேர்ந்த பன்னீர்செல்வம் மகள் புனிதவதி(18). பெற்றோர் திருமண ஏற்பாடு செய்ததால் திருமணத்தில் விருப்பம் இல்லாததால் மனமுடைந்த புனிதவதி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | S பிரபாகர் (30.3.11) |
| 932. | 31.3.2011 | **திருச்சி மாவட்டம்:** உறையூர் மேலகல்நாயக்கன் தெருவைச் சேர்ந்த விஜயகுமார் மகள் திவ்யா(18). கல்லூரி சென்ற திவ்யாவை காணவில்லை என பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & மாணவி மாயம் | S பிரபாகர் (30.3.11) |
| 933. | 31.3.2011 | **திருச்சி மாவட்டம்:** தோளூர்பட்டியைச் சேர்ந்த அழகேசன் மவைி கவிதா (எ) கோமதி. வீட்டில் தனியாக இருந்த கவிதா தூக்கிட்டுத் தற்கொலை. தனது மகள் சாவில் மர்மம் இருப்பதாக கவிதாவின் தந்தை புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | S. பிரபாகர் (30.3.11) |
| 934. | 31.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் அடுத்த விண்ணமங்கலத்தைச் சேர்ந்த ஷீலாராணி(30) மகன் கென்னடி குப்பத்தில் தனியார் பள்ளியில் படித்து வருகிறான். பள்ளி ஆண்டு விழாவில் பங்கேற்க ஷீலாராணியும், அவரது சகோதரி சங்கீதாவும் சென்றனர். அதே குப்பத்தைச் சேர்ந்த சதீஷ்(26) பிரவீன்குமார், மலர்மன்னன், காந்தராஜ் ஷீலாராணி மற்றும் அவரது | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (28.3.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சகோதாரியிடம் தகராறு செய்ததோடு கிரிக்கெட் மட்டையால் அடித்ததாக ஷீலாராணி புகார். | | |
| 935. | 31.3.2011 | **திருப்பத்தூர் மாவட்டம்:** திருப்பத்தூர் அடுத்த கால்லக்கொட்டாயைச் சேர்ந்த சென்னையன்(32) மனைவி பூங்கொடி(28). பூங்கொடிக்கு கர்ப்பபையில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மனமுடைந்த பூங்கொடி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (29.3.11) |
| 936. | 31.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பெங்களூர் நெம்ப கவுடாலா பகுதியைச் சேர்ந்த கன்னியப்பன்(30) மனைவி லாவண்யா(26). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக லாவண்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் (29.3.11) |
| 937. | 31.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** நாட்றம்பள்ளி ஒன்றியம் ஜவ்வாது ராமசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த ஜெயமோகன்(27) மனைவி சரிதா(24). கணவர் ஜெயமோகன் தினமும் குடித்து விட்டு வந்து துன்புறுத்துவதாக சரிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 938. | 31.3.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அடுத்த மெய்யூர் கிராமத்தைச் சேர்ந்த மோகன்(32) திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் பிறப்புச் சான்றிதழ் வாங்க எழுத்தர் லோகநாதனை அணுகினார். அவர் ரூபாய் 10 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக மோகன் புகார். | லஞ்சம் | பாஸ்கர் (29.3.11) |
| 939. | 31.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அடுத்த பாப்பாம்பாடி கிராமத்தைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி(32). மனைவி கல்பனா(27). கணவனின் குடிப்பழகத்தால் கணவன் மனைவி இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த கல்பான தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (29.3.11) |
| 940. | 31.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வாணியம்பாடி ே3தாஜி நகர் பகுதியைச் சேர்ந்த சாயிராபானு(23) மனைவி கவிதா(28). சாயிராபானு கவிதாவிடம் ஆயிரம் ரூபாய் கடனாக வாங்கினார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் (30.3.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **இருவருக்கும் ஏற்பட்ட பணத் தகராறில் கவிதா சாயிராபானுவை ஆபாசமாக திட்டியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக கவிதா மீது சாயிராபானு புகார்.** | **மிரட்டல்** | |